செய்தி வெளியீடு எண்–751 நாள்–20.11.2007

# செய்தி வெளியீடு

## மாநிலத் திட்டக் குழு

தொன்மை அமைப்பினை பாதுகாக்கும் எண்ணத்தோடு தமிழகத்தில் உள்ள பழம் பெரும் கட்டடங்கள், வழிபாட்டுத் தலங்கள், நினைவிடங்கள், பொது இடங்கள் ஆகியவற்றை பாதுகாத்து உரிய முறையில் பொதுமக்களும், உலக நாடுகளிலிருந்து வருகின்றவர்களும் சுற்றுலா பயணிகளும் காணும் வண்ணமும், வருங்கால சந்ததியினர் இந்த மரபு மேன்மைச் சின்னங்களின் மேன்மையை அறிந்துகொள்ளவும் இந்த முதல் கூட்டத்தில் கருத்துகள் பரிமாறப்பட்டன. மேலும் இந்த மரபுவழி சின்னங்களை பாதுகாப்பதற்குரிய சட்டமும் அதற்கு உரிய அமைப்புகளும் சிறப்பான முறையில் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் இக்கூட்டம் ஆய்வு செய்யும். இக்கூட்டத்திற்கு திட்டக்குழு துணைத்தலைவர், மரபு சார் தொன்மைக் குழுவின் மரபு சின்னங்களை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட பல்துறை அறிஞர்களின் குழுவிற்கு தலைவராக உள்ள பேராசிரியர்.மு.நாகநாதன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மாநிலத் திட்டக்குழு முழு நேர உறுப்பினர் முனைவர் ஆர்.சீனிவாசன், பகுதி நேர உறுப்பினர் பேராசிரியர் பெ.ஜெகதீசன், உறுப்பினர் செயலர் திருமதி கிரிஜா வைத்யநாதன், திரு.கே.செல்லமுத்து, செயலர், வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை, திரு.வெ.இறையன்பு, செயலர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, டாக்டர் டேவிட் அம்புரோஸ், விரிவுரையாளர், சட்டத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், திரு.அசோக் டோங்க்ரே, ஆணையர், நகர் ஊரமைப்புத் துறை பின்னி குரியாகோஸ், அனிதா பொட்டுக்குள்ளம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.